*7*

# நியாயாதிபதிகளின் காலம், கி.மு. 1400–1095

## *யோசுவாவின் மரணத்திலிருந்து சவுல் அபிஷேகம் செய்யப்பட்டது வரை*

## *நியாயாதிபதிகள், ரூத், 1 சாமு. 1 -10*

### I. மத ரீதியான நிலை.

இஸ்ரவேலரின் மதரீதியான நிலை பின்வருமாறு தொகுத்துரைக்கப் படலாம்:

***1. விக்கிரகாராதனைக்குத் திரும்புதல்களின் வரிசைத் தொடர்.***— இதற்கான காரணங்கள் பின்வருவனவற்றில் காணப்பட வேண்டியவை களாய் உள்ளன:

*அ. விக்கிரகாராதனைக்காரர்களாயிருந்த முன் பரம்பரை (இ.வ. ஆதி. 31:19; 35:2; யோசு. 24:2-14).*—ஆபிரகாம் விக்கிரகாராதனையைக் கை விட்டிருந்தார், ஆனால் அது, யாக்கோபின் திருமணத்தின் மூலம் குடும்ப வாழ்வில் மீண்டும் உட்புகுந்திருந்தது; மற்றும், யாக்கோபு (அந்த) விக்கிரகங்களைப் புதைத்திருந்தாலும், அதன் தடயங்கள் சில அநேகமாய்த் தொடர்ந்திருந்தன.

*ஆ. அவர்களின் எகிப்திய அடிமைத்தனம் (இ.வ. யாத். 32:21-34; யோசு. 24:14).*—இஸ்ரவேலர்கள் சீனாய் மலையின் அடிவாரத்திலே அவ்வளவு விரைவில் மற்றும் அவ்வளவு கீழ்மையாக விக்கிரகாராதனையில் வீழ்ந்து போயிருந்த அளவுக்கு (எகிப்தில்) அவர்கள் அதில் ஆழமாக ஊறியிருந்திருக்க வேண்டும்; மற்றும் யோசுவாவின் (பிரியாவிடை) உரையானது, வனாந்தரத்தில் ஒழுங்கு நடவடிக்கை அதை (விக்கிரகாராதனையை) முற்றிலுமாக நீக்கிப் போடவில்லை என்பதற்கு முடிவான ஆதாரமாக உள்ளது.

*இ. கானானிய இனத்தவரின் கெடுக்கும் போக்குகள்.*—கானான் நாடானது அக்காலத்தின் மிகவும் தரக் குறைவான மத அமைப்பின் மையமாய் இருந்தது. அங்கிருந்து கார்த்தேஜ், கிரேக்கம் மற்றும் ரோமாபுரி ஆகியவை தங்கள் மதங்களின் சிற்றின்பப் பற்றான அம்சங்களை எடுத்திருந்தன. எனவேதான் கானானியரைத் துரத்தி விடும்படி அல்லது அவர்களை அழித்துப் போடும்படி தெய்வீக ஆணை உண்டாயிற்று. அது மட்டுமே இஸ்ரவேலரின் ஒரே பாதுகாப்பாக இருந்தது. எமோரியரின்

அக்கிரமம் நிறைவடைந்தது. அந்த ஆணைக்குக் கீழ்ப்படியத் தவறி, தொடர்ந்த கலப்புத் திருமணங்கள் சுத்தமான பக்தியை அழிக்கும் வழிமுறைகளாயின.

***2. பின்தொடர்ந்த அடக்கு முறைகள் இயல்பான விளைவாயிருந்தன.*** —அருகில் இருந்த இனத்தவரால் ஆன இந்த அடக்கு முறைகள் இயல்பான விளைவாய் இருந்தன. ஒழுக்க ரீதியில் பலவீனமானவர்கள், அரசியல் ரீதியில் பலவீனமாயினர். அவைகள் ஒழுங்குபடுத்தும் நியாயத்தீர்ப்புக் களாகவும் இருந்தன. மோவாபியர்கள் அல்லது மீதியானியர்கள் அல்லது பிலிஸ்தியர்களின் கொடுமையினால் மீண்டும் மீண்டும் வருத்தத்திற் குள்ளான இஸ்ரவேலர்கள் தங்களை ஒடுக்கியவர்களின் விக்கிரகாராதனை யில் இருந்து யெகோவாவை ஆராதிப்பதற்குத் திரும்பினார்கள். நீண்ட (கால) ஓட்டத்தில் மிகச் சுத்தமான விசுவாசம் வெற்றியடைந்தது.

***3. நியாயாதிபதிகள் என்று அழைக்கப்பட்ட விடுதலையாளர்களின் வரிசைத் தொடர்.*** —இவர்கள் முழு நிறைவான மனிதர்களாய் இருந்த தில்லை. இவர்கள் கிறிஸ்தவ விசுவாச வீரர்களுக்கு மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தனர். இவர்கள் அடிக்கடி, மூட நம்பிக்கை உள்ளவர்களாக, எளிதில் உணர்வுக்கு ஆட்படக் கூடியவர்களாக, ஒழுக்க ரீதியாகப் பலவீனம் கொண்டவர்களாக இருப்பினும் இவர்கள் தேவன்மீது விசுவாசம் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட காலகட்டத்தில் அதுவே அதிகமானதா யிருந்தது. பவுலும் லூத்தரும் தங்கள் மட்டங்களுக்கு மேலாகச் செயல் பட்டது போலவே இவர்கள் தங்கள் வயதின் எல்லா மட்டங்களுக்கும் மேலாக, எழும்பி நின்றனர், எனவே விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெறத் தகுதியாகின்றனர். மேலும், இவர்கள் நாட்டுப் பற்றாளர்களாகவும் இருந்தனர். இன ரீதியான மற்றும் உள்ளூர் சார்ந்த பொறாமை நிலவி வந்த ஒரு கால கட்டத்தில், இவர்கள் பெருமளவுக்கு விடுதலை உணர்வுடன் எழும்பி நின்றனர். இவர்கள் தங்கள் நாட்களின் நேருகளாக, சாஸ்திரிகளாக, பட்டேல்களாக இருந்தனர்.

## II. *அரசியல் ரீதியான நிலை.*

*அரசியல் ரீதியாக தேசிய நிறுவனமோ, தேசீயத் தலைமையகமோ அல்லது தேசியத் தலைவரோ (அன்று இஸ்ரவேல் மக்களிடையில்) இருந்ததில்லை. மோசே ஒரு மத அமைப்பைக் கொடுத்திருந்தார், ஆனால் அது நன்கு விளக்கியுரைக்கப்பட்டிருந்த அரசியல் ஆட்சி முறையாய் இருந்ததில்லை. அவர்கள் பன்னிரெண்டு கோத்திரங்களாயிருந்தனர், சில வேளைகளில் பொதுத் தற்காப்புக்காக ஒன்றுகூடி இணைந்தனர், சில வேளைகளில் ஒருவர் மற்றவரை முற்றிலும் அழித்துப் போடுமளவுக்குச் சச்சரவு செய்தனர். அவர்களின் நிலைமையானது வல்லபாய் பட்டேல் அவர்களால் ஒன்றிணைக்கப்படுவதற்கு முன் இந்தியாவின் சமஸ்தானங்கள் இருந்த நிலையுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், அவர்கள் சிற்றினங்களாய் பிரிந்து போகாதவாறு அவர்களை ஒன்றுகூட்டிப் பிணைத்திருந்த மூன்று பிணைப்பு(காரணங்)கள் பின்வருமாறு:*

*அ. ஒரு பொதுவான முன் பரம்பரையும் வரலாறும்.*—ஆபிரகாம் அந்த இனத்தைத் தோற்றுவித்தவராக இருந்தார்; அவர்கள் ஈசாக்கு மற்றும் யாக்கோபுமீது தங்கள் பயபக்தியைச் சமமாய்ப் பகிர்ந்து கொண்டார்கள்; யோசேப்பு, மோசே, யோசுவா போன்ற இப்படிப்பட்ட பெயர்கள் அவர்களின் ஒளிர்வாய் இருக்கையில், செங்கடல் மற்றும் யோர்தானைக் கடந்து, (கானானை) வெற்றி கொண்டது ஆகியவை அவர்களின் இன மரபுரிமையாய் இருந்தன.

*ஆ. எபிரெயம் என்ற ஒரு பொது மொழி.*—பல்வேறு வட்டார மொழி வழக்குகள் இருந்ததின் தடயங்கள் உள்ளன, ஆனால் இம்மாறுபாடு என்பது ஆல்ஃபிரடின் நாட்களில் இங்கிலாந்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகமாய் இருந்ததில்லை.

*இ. ஒரு பொது மதம்.*—ஆசரிப்புக் கூடாரம் சீலோவில் அமைக்கப் பட்டிருந்தது. அங்கு (ஒரே) ஒரு பலிபீடம் இருந்தது. அங்கு (எபிரெய) இனத்தின் பிரதான ஆசாரியர் குடியிருந்தார். அங்கு அன்றாடம் (எபிரெய) இனத்திற்கான பலிகள் செலுத்தப்பட்டன. கோத்திரங்களின் பிரதிநிதிகள் ஆண்டின் மாபெரும் மூன்று பண்டிகைகளுக்கு இங்குதான் சென்றனர். இப்படிப்பட்டவையே இப்பணியின் மைய ஈர்ப்பு சக்தியாய் இருந்தன. கிரேக்கர்களும் இதே போன்ற பிணைப்புகளைக் கொண்டிருந்தனர்; ஆனால் புவியியல் நிலைகள், ஒரு இனமாக/நாடாக அவர்கள் வடிவெடுக்கும்படி ஒருக்காலும் ஒன்றுபடாதபடி வலிவானதொரு தனித்துவத்தை முன்னதாக வளர்ந்திருந்தன. இந்தப் பிணைப்புகள் எபிரெயர்களை, தீர்க்கதரிசியான சாமுவேலிடத்திலும், அரசரான தாவீதினிடத்திலும் மிக மேன்மையான விசுவாசத்தையும் அவர்களை ஒரே நாடாக இணைத்து வைத்திருப்பதற்கான அரசியல் நிறுவன மதிநுட்பத்தை யும் அவர்கள் கண்டறியும் வரைக்கும் பிணைத்து வைத்திருந்தன.

## III. முதன்மையான ஆறு படையெடுப்புகள்.

இன/நாட்டு வாழ்வின் இந்தப் பண்படாத ஆனால் வடிவு பெறும் கால கட்டத்தின் போது, வெளியிலிருந்து (எபிரெயர்கள் மீது) முதன்மையான ஆறு படையெடுப்புகள் நடைபெற்றன. நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, இவைகள் இனரீதியான விசுவாச விலக்கத்திற்கான தெய்வீக, நியாயத் தீர்ப்பாகவும் இயல்பான விளைவாகவும் வந்தன. "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்"; "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்" - இப்படிப்பட்ட வாக்கியங் கள் நியாயாதிபதிகளின் புத்தகத்தில் பத்து முறைகள் திரும்பத் திரும்பக் கூறப்படும் அடுத்தடுத்த வாக்கியங்களாக உள்ளன,[1] இவை தமது ஒழுக்க ரீதியான தனிச் சிறப்பினால் வரலாற்றை உடுத்துவிக்கின்றன. இது, சிலுவைப் போர்கள் அல்லது நார்மனின் வெற்றி கொள்ளுதல் போன்றே வரலாற்றின் ஒரு அத்தியாயம் என்ற வகையில் வலிவான மதத்துவம் கொண்டுள்ளன; ஆனாலும், யெகோவாவைத் தேவனாகக் கொண்ட இஸ்ரவேல் மக்கள் கடைசியில் ஒரு இனமாவதற்கு/நாடாவதற்குரிய

ஒழுங்குபடுத்தும் செயல் என்பதே இதில் அமைமயப்பெற்ற மிக மேன்மையான தனிச்சிறப்பாக உள்ளது.

***1. கிழக்கிலிருந்து மெசொப்பொத்தாமியர்களின் படையெடுப்பு.—*** *ஆபிரகாமின் காலத்தில் ஐப்பிராத்து நதியின் பிரபுக்கள் யோர்தான் வரைக்கும் தங்கள் பேரரசை விரிவாக்கி, லோத்தைச் சிறைப்பிடித்துச் சென்றனர் என்று நாம் கண்டிருக்கின்றோம். ஐந்நூறு ஆண்டுகள் கடந்து விட்டன. அம்மாபெரும் சமவெளியின் இன்னொரு பிரபு இன்னொரு மேற்கத்தியப் படையெடுப்பைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லுகின்றார். அந்த நுகத்தின் கீழ் இஸ்ரவேலர்கள் எட்டு ஆண்டுகள் அளவாக வேதனைப் பட்டுக் கூக்குரலிடுகின்றனர், அப்பொழுது காலேபின் தம்பி(கேனாஸ்)யின் மகனான ஒத்னியேல் என்பவர் எழும்புகின்றார், இவர் படையெடுத்து வந்த அவர்களை (மெசொப்பொத்தாமியரை) எதிர்த்து நின்று, அவர்களை ஐப்பிராத்துப் பகுதிக்கு திரும்பத் துரத்துகின்றார்.*

***2. தென்கிழக்குப் பகுதியிலிருந்து மோவாபியரின் படையெடுப்பு.—*** *லோத்தின் சந்ததியாரான மோவாபியர்கள் சவக்கடலின் கிழக்குப் பகுதியில் வாசம் பண்ணினார்கள். எக்லோனின் (தலைமையின்) கீழ் அவர்கள் தென்கிழக்குக் கோத்திரங்களைக் கீழ்ப்படுத்தியிருந்தார்கள், மற்றும் யோர்தானைக் கூடக் கடந்து வந்து எரிகோவைப் பதினெட்டு ஆண்டுகள் அளவாகப் பிடித்து வைத்திருந்தார்கள். பென்யமீன் கோத்திரத்தாரான ஏகூத் என்பவர் (இஸ்ரவேல்) கோத்திரங்களின் காணிக்கையை/கப்பத்தை எடுத்துக் கொண்டு செல்ல எக்லோனிடத்தில் எரிகோவுக்குச் சென்றார். இரகசியமாக ஒரு நேர்முகப் போட்டியின் போது அவர் அரசரைக் குத்திக் கொன்று விட்டு, மேற்கு மலைகளுக்குத் தப்பியோடி, ஒரு படையை ஏற்படுத்தி, யோர்தானின் துறைகளைப் பிடித்து, மோவாபியர்களில் பத்தாயிரம் பேரை யுத்தத்தில் வெட்டிக் கொன்றார். இது குறைந்தது எண்பது ஆண்டுகள் அளவாக நாட்டின் அப்பகுதிக்குச் சமாதானத்தைக் கொடுத்தது.*

***3. வட பகுதியிலிருந்து கானானியரின் படையெடுப்பு.—*** *யோசுவா, மேரோம் ஏரியின் அருகில் யாபீன் என்பவரின் தலைமையின் கீழ் வந்த வடபகுதி யுத்தக் குழு ஒன்றைத் தோல்வியடையச் செய்திருந்தார். பிற்பாடு வந்த ஒரு யாபீனின் தலைமையின் கீழ் இந்த வடபகுதிக் கானானியர்கள் அணிவகுத்து வந்து வடக்குக் கோத்திரங்களை இருபது ஆண்டுகள் அளவாக அடக்கி ஆண்டார்கள். கடைசியில் அரிதான விசுவாசமும் தைரியமும் கொண்ட பெண் தீர்க்கதரிசியான தெபொராள் என்ற பெண்மணி நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த பாராக் என்பவரைத் தூண்டினாள். அவர் பத்தாயிரம் மனிதர்களைக் கொண்ட ஒரு படையைச் சேகரித்து, எஸ்தரலோன் சமவெளியில் மாபெரும் வெற்றியை அடைந்தார். கானானியப் படைத் தளபதியான சிசெரா, கால் நடையாய்த் தப்பியோடி, யாகேலின் கூடாரத்தில் தஞ்சம் அடைந்தான், இந்த யாகேல் மோசேயின் மாமனாரான எத்திரோவின் சந்ததியில் வந்த கேனியனான ஏபேர் என்பவரின் மனைவியாயிருந்தாள். யாகேல் தன் காலத்தின் ஜான்ஸி ராணி என்று தன்னை நிரூபித்தாள், உறங்கிக் கொண்டிருந்த சிசெராவின் நெற்றியில் அவள் கூடார ஆணியை அடித்துச் செலுத்தினாள். அந்த வெற்றியானது*

*தெபொராளினால் சொல்லாற்றல்மிக்க யுத்தப் பாடல் ஒன்றில் கொண்டாடப்பட்டது (நியா. 5).*

***4. கிழக்கிலிருந்து மீதியானியர்களின் படையெடுப்பு.***—*மீதியானியர்கள் என்பவர்கள் ஆபிரகாமுக்கு அவரது மனைவியான கேத்தூராள் மூலமாகப் பிறந்த சந்ததியார்களான அரபியர்களாய் இருந்தனர். அவர்கள் நாட்டில் குடியமர்ந்திருக்கவில்லை, ஆனால் அறுவடை வேளையில் நிலத்தில் கொள்ளையிட்டு, கொள்ளைப் பொருளைச் சுமந்து கொண்டு புறம்பே சென்று விடுவார்கள். இஸ்ரவேலர்கள் மலைகளிலும், அரண் சூழ்ந்த நகர்களிலும், மலைக் குகைகளிலும் கூட சென்று தங்கும் அளவுக்கு மீதியானியரின் கொள்ளையிடுதல் மிகவும் பயங்கரமானதாக இருந்தது. தேவன் மனாசே கோத்திரத்திலிருந்து கிதியோன் என்ற இரட்சகனை எழுப்பினார். அவர் தன் சொந்த ஊரில் மற்றும் தனது தந்தையின் வீட்டில் பாகாலுக்கு செய்யப்படும் வழிபாட்டை அழிப்பதிலிருந்து தமது பணியைத் தொடங்கினார். பின்பு அவர், முப்பத்து இரண்டாயிரம் மனிதர்கள் கொண்ட படையைச் சேகரித்து, பயம் கொண்டவர்களை வீடு திரும்ப அனுமதித்ததின் மூலம் அவ்வெண்ணிக்கையை பத்தாயிரமாய்க் குறைத்தார்; இன்னும் அதை அவர், தண்ணீரைத் தங்கள் கையில் எடுத்து முன் ஜாக்கிரதையுடன் குடித்தவர்களாகிய முந்நூறு பேரை மட்டும் தேர்ந்தெடுத்ததின் மூலம் எண்ணிக்கையை இன்னும் குறையச் செய்தார். இந்தச் சிறு அணியுடன் அவர் மீதியானியர்களின்மீது இரவு நேரத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்து அவர்களைத் துருவித் தேடிப் பெருமளவு கொன்று குவித்து, கிழக்குப் பாலைவன முனை வரையிலும் அவர்களை விரட்டிச் சென்றார். பாராக் மற்றும் கிதியோன் ஆகிய இருவரின் வெற்றிகளும் வடக்குக் கோத்திரங்களால் பெற்றுத் தரப்பட்டன. வல்லமை நிறைந்த எப்பிராயீமின் மைய கோத்திரமானது இந்த மகிமைகளில் தனது சிறிய பங்கினால் மனவேதனையடைந்தது; அவர்களின் பொறாமையைக் கிதியோன் புத்தி கூர்மைமிக்க அதிகப் புகழ்ச்சியின் ஒரே ஒரு பொழிவினால் அமைதிப்படுத்தினார் (நியா. 8:1-3). கிதியோன் அந்த வேளையின் வீரரானார். அவருக்கு கிரீடம் அளிக்கப்பட்டது ஆனாலும் அதை அவர் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். அவரது, அதிகப் பேராவல் கொண்ட ஆனால் குறைவான தகுதி கொண்ட மகனான அபிமெலேக்கு என்பவர் தனது சகோதரர்கள் யாவரையும் - ஒருவரைத் தவிர - கொலை செய்தார், மற்றும் சீகேமில் சற்று காலமே இருந்த உள்ளூர் ஆளுகையொன்றை வெற்றி கொண்டார். அவர் ஒரு கலகத்தை அடக்கிய வேளையில் தனது கிரீடத்தையும் வாழ்க்கையையும் இழந்தார்.*

***5. கிழக்கிலிருந்து அம்மோனியர்களின் படையெடுப்பு.***—*மோவாபியர்களைப் போன்றே அம்மோனியர்களும் லோத்தின் சந்ததிகளாய் இருந்தனர். யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் இருந்த நாட்டை அவர்கள் பிடித்து, கிழக்குப் பாலைவனத்தில் திரளாய் நிறைந்திருந்தனர். விரைவிலேயே அவர்கள் கிழக்குக் கோத்திரங்களைப் பின்னோக்கித் துரத்தத் தொடங்கினார்கள். யெப்தா என்பவர் (இஸ்ரவேல் மக்களின்) விடுதலைக் கருவியானார். இவர் கீழ்மையாய்க் கருதப்பட்ட பிறப்புடையவராக,*

*(தகப்பனின்) உடைமைகளின் உரிமைகோர முடியாத (பரஸ்திரீக்குப் பிறந்த) சட்டத்திற்குப் புறம்பானவராக இருந்தார், ஆனால் அம்மோனியர் களை வெளியேற்றுவதற்காக அவர் மீண்டும் அழைக்கப்பட்டு, மீண்டும் பதவியளிக்கப்பட்டு, படைகளின் தலைவராக்கப்பட்டார். அவர் யுத்தத் திற்குச் செல்வதற்கு முன், தாம் வெற்றியுடன் திரும்பினால், தம் வீட்டு வாயிலில் தமக்கு முன் முதலாவதாக எதிர்ப்படுவதை யெகோவாவுக்குப் பலி செலுத்துவதாகப் பொருத்தனை செய்து கொண்டார். அவர் யுத்தத்தில் வெற்றி பெற்றார், வீடு திரும்புகையில் தமது ஒரே மகளால் எதிர்கொள்ளப் பட்டார், அவள் மீது தனது பொருத்தனையை நிறைவேற்றினார்.*

***6. தென் மேற்கில் இருந்து பெலிஸ்தியரின் படையெப்பு.***—*பெலிஸ்தர் கள் மத்திய தரைக்கடல் பகுதியில் வலுச்சண்டை செய்யும் வர்த்தக மக்களாய் இருந்தனர். அவர்கள் பெனிக்கியர்களின் விரோதிகளாய்/ போட்டியாளர்களாய் இருந்தனர், ஒருமுறை அவர்கள் சீதோன் நகரைச் சிறைப்பிடித்தனர், அது முதல் அந்நகரானது பெனிக்கியாவில் தீர் என்ற நகருக்கு அடுத்த இரண்டாம் இடத்திற்கு மூழ்கிப் போயிற்று. பெலிஸ்தர்கள் இஸ்ரவேல் மக்களுக்கு மிகவும் ஆழமான விரோதிகளாய் இருந்தார்கள், நியாயாதிபதிகளின் காலம் முழுவதிலும், மற்றும் முடியாட்சி காலத்திலும் கூட தாவீதினால் முறியடிக்கப்படும் வரையிலும் இவர்கள் இஸ்ரவேலரைத் துன்புறுத்தி வந்தார்கள். விசேஷமாக, தென் பகுதிக் கோத்திரங்களான சிமியோன், தாண் மற்றும் யூதா ஆகிய கோத்திரங்கள் இவர்களின் தாக்குதலுக்குள்ளாயின. தாண் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்சோன் இந்த இராணுவ வீரர்களில் கடைசியானவராக, சில அம்சங்களில் குறிப்பிடத் தகுந்தவராக இருந்தார், அவர் பிறப்பில் இருந்தே நசரேயனாக*[2] (Nazarite) *அதாவது, அசுத்தமான/தீட்டான ஏதொன்றையும் உண்ணாதிருத்தல், திராட்ச இரசத்தை அருந்தாமல் இருத்தல் மற்றும் ஒருக்காலும் தன் தலை முடியைக் கத்தரியாமல் இருத்தல் என்பவற்றைக் கைக் கொள்ளும்படி தனது தாயினால் பொருத்தனை மேற்கொள்ளப்பட்டவராயிருந்தார். அவர் எபிரெய ஹெர்குலிஸாக இருந்தார், சக்திமானுக்குரிய செயல்களில் மகிழ்ந்தார், அடிக்கடி நம்ப இயலாத செயல்களைச் செய்தார் ஆனால் எப்பொழுதும் நாட்டுப் பற்றுள்ளவராயிருந்தார். தென்மேற்கு மலைகளில் இருந்த தமது வீட்டில் இருந்து அவர் அடிக்கடி பெலிஸ்தருக்கு எதிராகச் சூறையாடுதல்களைச் செய்தார், எப்பொழுதும் தாம் ஒருவராகவே, தனியராகவே இவைகளைச் செய்தார். பெலிஸ்தியப் பெண்கள் இருவரை அவர் திருமணம் செய்து கொண்ட விஷயமானது அவரது வெற்றிகளுக்கும் அவரது கடைசி வீழ்ச்சிக்கும் வழிகோரியவைகளாய் இருந்தன; ஏனெனில் சிம்சோன் ஒரு பலவீனமான பலவானாய் இருந்தார். தெலீலாளின் வேண்டுகோள்களுக்கு இணங்கி, அவர் தமது பலத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துகின்றார், தமது நசரேய விரதத்தை மீறும்படி தம் முடி வெட்டப்படுவதை அனுமதிக்கின்றார். அவர் (ஒரு காலத்தில்) பெயரைக் கேட்டாலே பெலிஸ்தர் அனைவரும் பயம் கொண்ட சிம்சோனைச் சிறுமைப்படுத்தும் காட்சியாயிற்று, அப்போது அவரது தலை தெலீலாளின் மடியில் இருந்தது. அவர் அவளது முன்னிலையினின்று அகற்றப்பட்டு,*

தேவனுக்கு அந்நியப்பட்டு, அவருடைய விரோதிகளின் கையில் அகப்பட்டார். கபோதியாக்கப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டு, அடிமைப் பெண்கள் செய்யும் மாவறைக்கும் பணிக்குத் தாழ்த்தப்பட்டார், (இருப்பினும்) அவர் தம் பொருத்தனையைப் புதுப்பிக்கவும், தம் பலத்தை மீண்டும் பெறவும் (சிறையில்) ஒரு வாய்ப்பைப் பெறுகின்றார். பெலிஸ்தரின் தெய்வமான தாகானின் திருவிழாவின் போது கூடி வந்த கூட்டத்தை மகிழ்விப்பதற்காக வெளியே அழைத்து வரப்பட்ட சிம்சோன், சுவிட்சர்லாந்து நாட்டின் வின்க்ளெரிய்டு போலத் தனது நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிரையை அர்ப்பணிக்கின்றார். கோயிலின் மையத் தூண்களைக் கீழே இழுத்துத் தள்ளிய அவர் தமது விரோதிகள் ஆயிரக்கணக்கில் உயிருடன் புதையுண்ட அக்கல்லறையில் தம்மைத் தாமே புதைத்துக் கொண்டார். பெலிஸ்தியாவின் வல்லமை முறிக்கப்படாதிருந்தது; ஆனால் அவரது (சிம்சோனின்) துணிகரமான செயல்கள் இஸ்ரவேலரின் தைரியத்தை மீண்டும் தூண்டவும், சாமுவேல் மற்றும் தாவீது ஆகியோரின் அதிக நிலையான செயல்களைச் சாத்தியமாக்கவும் தொலைவில் சென்று நோக்கங்களை நிறைவேற்றின.

## IV. ரூத்தின் வரலாறு.

நியாயாதிபதிகளின் காலத்தில் ஏதோ ஒரு வேளையில் ரூத்தின் புத்தகத்தில் எடுத்துரைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது அக்காலத்தில் வாழ்ந்த ஒரு இனிய அமைதி நிறைந்த (குடும்ப) வரலாறாகும். இப்புத்தகத்தை முழுமையாகப் படிக்க வேண்டியது அவசியம். எலிமெலேக்கும் நகோமியும் பெத்லகேமில் வாழ்கின்றனர். ஒருவேளை படையெடுப்புகள் பலவற்றின் காரணமாய் ஏற்பட்ட பஞ்சம் அவர்களை மோவாப் நாட்டுக்கு இடம்பெயரும்படி வழிநடத்திற்று. அங்கு அவர்கள் மகன்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். பத்து ஆண்டுகள் கடக்கின்றன, அம்மூன்று பெண்களும் பிள்ளைகளற்ற விதவைகளாகின்றனர். நகோமி தனது முகத்தைச் சொந்த ஊரை நோக்கித் திருப்புகின்றாள். இளம் பெண்கள் இருவரும் அவளுடன் பயணமாகின்றனர். புற இனத்தைச் சேர்ந்த அவ்விரு (மரு)மகள்களும் (தங்களுக்கு) அந்நியமான நாட்டிலே எவ்வளவு தனிமைப்பட்ட வாழ்வை வாழ வேண்டியிருக்கும் என்று உணர்ந்த நகோமி அவர்களைத் திரும்பிச் செல்லும்படி அறிவுரை கூறுவதில் பிரயாசப்படுகின்றாள். அதில் தடுமாறிய ஓர்ப்பாள் திரும்பிச் செல்லுகின்றாள். ரூத் கூறிய மறுமொழியானது மிகச் சிறந்த மொழிநடையாகியுள்ளது (ரூத். 1:16, 17). அப்படிப்பட்ட விசுவாசமும் அர்ப்பணிப்பும் பலன் அளிக்கப்படாமல் போய் விடவில்லை. பெத்லகேமை அடைந்த பொழுது ரூத் தனது கணவரின் நெருங்கிய உறவினரான போவாஸின் நிலத்திற்குக் கதிர் பொறுக்க செல்லுகின்றாள். நகோமியினால் அறிவுறுத்தப்பட்ட அவள் (ரூத்) தனது (இறந்து போன) கணவரின் பெயரையும் சுதந்தரத்தையும் நிலைநாட்டுவதற்காக திருமணத்திற்கான நெருங்கிய உறவுமுறையாளான தனது உரிமையைக்கோருகின்றாள்; எனவே அவள் தாவீது, மரியாள் மற்றும் இயேசு ஆகியோரின் மதிப்புமிக்க முன்னோர் ஆகிறாள்.

# V. *தீர்க்கதரிசியும் - நியாயாதிபதியுமான, சாமுவேல்.*

## *(1 சாமுவேல் 1-10.)*

*சாமுவேல் என்பவர் மோசேக்கும் தாவீதுக்கும் இடையில் மிக முக்கிய மான பாத்திரமாக விளங்குகின்றார். அவர், தன் காலத்தின் லூத்தராகவும் யோவான் ஸ்நானனாகவும் இருந்தார். அவரது பிறப்பு முதல் அவரது மரணம் வரை அவரது முழுப்பணியும் நம்மைக் காலத்தின் தாழ்வான மட்டங்களில் இருந்து மேலாக உயர்த்துகின்றது. குழந்தையில்லாத அன்னாள், குழந்தைகள் வேண்டும் என்கிற எபிரெயத் தாயின் ஏக்கத்துடன் தேவனிடம் அவருக்காக (சாமுவேல் பிறப்புக்காக) கெஞ்சுகின்றாள், பின்பு அவரை தேவனுக்கே அர்ப்பணித்து விடுகின்றாள். இவ்விதமாக அவர் சீலோவில் ஆசரிப்புக் கூடாரத்தில் வளர்க்கப்படுகிறார்.*

*இந்த வேளையில் பிரதான ஆசாரியராய் இருந்த ஏலி, "நியாயாதி பதி"யாகவும் இருந்தார். இவ்விரு பணிகளையும் ஒரு நபருக்குள் இணைத்து வைத்த முதல் நபர் இவரே. வயது முதிர்ந்த ஏலி, தம்மில் (ஒழுக்கத்) தூய்மையுடையவராய் இருப்பினும், தமது மகன்களின் பாவங்களைக் கட்டுப்படுத்தாமல் அனுமதித்தார்.[3] பிள்ளையாயிருந்த சாமுவேலின் மூலம் தேவன் ஏலியின் வீட்டின் வீழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஆப்பெக் என்ற இடத்தில் நடைபெற்ற புகழ்மிக்க யுத்தத்தில் பெலிஸ்தர்கள் ஏலியின் இரு மகன்களையும் கொன்று பேழையைக் கைப்பற்றினார்கள். அந்தச் செய்தியைக் கேட்டவுடன் ஏலி கீழே விழுந்து இறந்தார். தொடர்ந்து வந்த இருளான ஆண்டுகள், சாமுவேல் தேவனுடைய தீர்க்கதரிசியாய் இருக்கும் படி அழைக்கப்பட்டதனால் வளர்ந்த நம்பிக்கையைக் கொண்டு விடுவிக்கப் பட்டன. சாமுவேலின் மாபெரும் ஊழியம் பின்வருமாறு தொகுத்துரைக் கப்படலாம்:*

*(1) அவர் ஒரு மாபெரும் தேச/இன/நாட்டு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார், உடன்படிக்கையைப் புதுப்பித்து, மக்களை யெகோவாவை வழிபடுவதற்குத் திருப்பிக் கொண்டு வந்தார்.*

*(2) பெலிஸ்தரால் தாக்கப்பட்ட பொழுது எபெசேனர் என்ற இடத்தில் இவர் (சாமுவேல்) தமது நியாயாதிபதி காலத்தில் அவர்கள் ஒருக்காலும் தாக்குதலைப் புதுப்பிக்காதவாறு அப்படிப்பட்ட ஒரு வெற்றியை அடைந்தார்.*

*(3) அவர் தீர்க்கதரிசிகளுக்குப் பள்ளிகளை நடத்தி வந்தார்.*

*(4) அவர் தம் வாழ்நாள் முழுவதும் இஸ்ரவேலை "நியாயந்தீர்த்தார்."*

*(5) அவர் முடியாட்சிக்கு வழியைத் தயார் செய்து, அதை அறிமுகப்படுத்தி, சவுலை அபிஷேகம் செய்வித்தார், சவுல் (தேவனால்) புறக்கணிக்கப்பட்ட பிறகு தாவீதை அபிஷேகம் செய்வித்தார். இவ்விதமாக சாமுவேல் நியாயாதிபதிகளிலிருந்து முடியாட்சிக்கு மாறிய காலத்திற்குரிய வராகின்றார். அவர் நியாயாதிபதிகளிலேயே கடைசியானவரும் மகா பெரியவருமாவார் மற்றும் அவர் மோசேக்குப் பிறகு எபிரெய*

தீர்க்கதரிசிகளின் முதலாவது மாபெரும் வழித் தோன்றலாகவும் இருந்தார்.

---

குறிப்புகள்

[1]*நியா. 3:7, 9; 3:12, 15; 4:1, 3; 6:1, 7; 10:6, 10.* [2]அல்லது Nazirite. [3]இவ்விடத்தில் டீன், "suffered" என்று எழுதினார்.